நல்லூர் ... யாழ்ப்பாணம்


# முரசொலி

பக்கங்கள் நான்கு — விலை ரூபா: 5-00

முரசு 06 ஒலி 160 ஆங்கிரச சித்திரை 23 ( 05 05 1992 ) செவ்வாய்


★ கூட்டுப்படைத் தலைமையகம் அறிவிப்பு

## கைதான மீனவரை விடுவிக்க தேர்தல் இடாப்புத் தேவை

அண்மைக் காலங்களில் கடலில் வைத்து படையினரால் பிடித்துச் செல்லப்பட்ட மீனவர்களின் விடுதலை தொடர்பாக கூட்டுப்படைத் தலைமையகம் புதிய புதிய நிபந்தனைகளை விதித்து வருகிறது முன்னர் விசாரணையின் பின்பு குற்றமற்றவர்கள் விடுவிக்கப்படுவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் தற்போது இம்மீனவர்களின் பெயர் விவரங்கள் யாழ் மாவட்ட தேர்தல் இடாப்புக்களில் இடம்பெற்றிருக்க வேண்டும் எனவும், அவ்வாறு உள்ளவர்களின் தேர்தல் இடாப்புப் பிரதியை சமர்ப்பிக்குமாறும் கூட்டுப்படைத் தலைமையகம் அறிவித்துள்ளதாக யாழ் செயலக வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது. (47)

# ஜனாதிபதி பிரேமதாஸவைக் கொல்ல சதித் திட்டம் தீட்டப்பட்டுள்ளதாம்!

### மரணவீட்டில்

மரணமான ஒருவரை பார்க்கச்சென்று 70 க்கும் மேற்பட்டோர் பலியான சம்பவம் காஷ்மீரில் நடைபெற்றுள்ளது பழைய வீடு ஒன்றில் நடந்த ஒரு பெண்ணின் மரணசடங்கில் கலந்து கொள்ள 500க்கும் மேற்பட்ட பெண்கள் திரண்டிருந்தனர். திடீரென வீட்டின் மாடி இடிந்துவீழ்ந்ததில் பலர் இடிபாடுகளில் சிக்கிக் கொண்டனர் இதுவரை 70 பேர் பலியானதாக தெரிவிக்கப்படுகிறது.

## அதிகாரிகள் மட்ட விசாரணை ஆரம்பம்

ஜனாதிபதி பிரேமதாஸவை கொலைசெய்ய சில சக்திகள் சதித் திட்டம் தீட்டியுள்ளதாக அரச சார்பு பத்திரிகையான டெய்லி ஒப்சேவர் செய்திவெளியிட்டுள்ளது.

இச்சதித்திட்டம் குறித்து அறியவந்துள்ளதையடுத்து உயர்அதிகாரிகள் குழு ஒன்று இதுகுறித்து விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

படுகொலை செய்யவோ அல்லது கடத்திச்செல்லவோ அல்லது நச்சுத்திராவகம் வீசவோ அச்சக்திகள் திட்டமிட்டிருந்ததாக அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினர் பலரை அரசின் கறுப்புப் பூனைகளே படுகொலை செய்ததாக முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் உடுகம்பொலவின் குற்றச்சாட்டைத் தொடர்ந்து கொந்தளிப்பான நிலை எழுந்துள்ளது.

ஸ்ரீமாவோ, லலித். காமினி ஆகியோரும் மற்றும் இடதுசாரிக்கட்சிகளின் தலைவர்களும் தமக்கு கொலைப்பயமுறுத்தல்கள் வந்துள்ளதாக அறிவித்துவரும் நிலையிலும், ஜனாதிபதி பிரேமதாஸ கொலைச்சதி குறித்த செய்திகளும் இப்போது வெளிவந்திருப்பதை அவதானிகள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

★ எழுதுவினைஞர் பரீட்சை

## சித்தியடைந்தவர்களுக்கு விரைவில் நேர்முகப்பரீட்சை

யாழ் மாவட்டத்தில் எழுதுவினைஞர் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்குரிய நேர்முகப் பரீட்சை இவ்வார இறுதியில் யாழ். கச்சேரியில் நடைபெறவுள்ளது.

முதற்கட்டமாக 48 பேர் தெரிவாகி கல்வித்திணைக்களத்தில் உள்ள வெற்றிடங்களுக்கு அடுத்த மாதம்1 ஆம் திகதி முதல் நியமிக்கப்படுவார்கள்

...04 ஆம் பக்கம் பார்க்க

### ஒலிபரப்பு

இன்று காலை முதல் புலிகளின் காலை நேர ஒலிபரப்புச் சேவை ஆரம்பமாகின்றது.

காலை 6 30மணிக்கு ஆரம்பமாகும் இச் சேவையில் பல நிகழ்ச்சிகள் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. காலை 6.50க்கு செய்திகள் ஒலிபரப்பாகும்

## தபால் மா அதிபர் அலுவலகம் நகரில் திறந்துவைக்கப்படும்

தபால் திணைக்களத்தில் மறுசீரமைப்பு நடவடிக்கையின்படி வடமாகாண பிரதி தபால் மா அதிபர் அலுவலகம் (ஏ. பி எம் ஜி ) நாளை புதன்கிழமை காலை 11 மணியளவில் யாழ்ப்பாணத்தில் திறந்துவைக்கப்படவுள்ளது.

வடமாகாண பிரதி தபால் மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ள எம். எம். சேதுகாவலர் இவ்வலுவலகத்தை யாழ் மணிக்கூட்டு வீதியில் உள்ள தபால் அத்தியட்சகர் அலுவலகத்தில் திறந்துவைப்பார்.

இனிமேல் வடமாகாணத்தில் உள்ள சகல தபால் பகுதி நடவடிக்கைகளும் இவ்வலுவலகத்தின் கீழ் நடைபெறும்

—04 ஆம் பக்கம் பார்க்க

● லோரன்ஸ் திலகர் பி. பி. ஸிக்கு பேட்டி

## கிழக்கில் படையினருக்கு அதிகாரம் படுகொலைகளுக்கு வழிசெய்தது

பொலநறுவை ஆகிய முஸ்லிம் கிராமம் மீதான தாக்குதலைப் புலிகளே செய்ததாக ஸ்ரீலங்கா அரசு செய்து வரும் பிரசாரத்தை புலிகளின் பிரமுகர் திலகர் நேற்று மறுத்தார்.

பி.பி.ஸிக்கு அவர் அளித்த பேட்டியில் "இப்படுகொலை அரசின் திட்டமிட்டசெயல் கிழக்குப்பகுதி இராணுவப் பீடத்திற்கு ஸ்ரீலங்கா அரசு கூடிய அதிகாரங்களை வழங்கியபோதே நாம் இப்படியான படுகொலைகளை எதிர் பார்த்தோம்.

கிழக்கில் ஏற்கனவே கருநாகம் என்ற அரசின் கொலைப்படை இயங்குகின்றது எனக் குறிப்பிட்ட திலகர், "வடக்கு கிழக்கு மாகாணங்களைப் பிரிக்க இனங்களிடையே மோதலை உருவாக்கி அங்கு சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்துவதே அரசின் திட்டம்" எனச் சுட்டிக்காட்டினார்.

## கனடா தமிழ் நகைக் கடையில் கொள்ளைமுயற்சி முறியடிப்பு

கனடா ரொரன்டோ நகரில் உள்ள தமிழ் கடை ஒன்றில் கொள்ளையிட முயன்ற இரு வியட்நாமிய இளைஞர்கள் கடை உரிமையாளர்களினாலேயே மடக்கி பிடித்த சம்பவம் ஒன்று அண்மையில் நடைபெற்றுள்ளது.

தமிழர் தகவல் என்ற பெயரில் ரொரன்டோ நகரிலிருந்து வெளிவரும் தமிழ் சஞ்சிகை ஒன்று இச்சம்பவத்தை வெளியிட்டுள்ளது,

ரொரன்டோ மிஸிஸாகவிலுள்ள ஆனந்தா ஜுவெலர்ஸ் என்ற ஒரு தமிழ் நகைக்கடையிலேயே இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

அம்பாக்கின் சகிதம் இரு வியட்நாமிய இளைஞர்கள் பிற்பகல் 2. 30 மணியளவில் அக்கடையினுள் நுழைந்து காசாளரான சண்முகநாதன் என்பவரை மடக்கிப் பிடித்ததுடன் நகை வாங்க அங்கு நின்ற ஓர் இந்தியப் பெண்மணியையும் மடக்கினர்.

எனினும் நகைகளை கொள்ளையடித்துக் கொண்டு தப்பியோட முயன்ற இரு வியட்நாமியர்களையும் கடை உரிமையாளர்களான இருவரும் திறத்துடன் மடக்கிப் பிடித்து அவர்களின் துப்பாக்கிகளையும் பறித்துக் கொண்டனர்.

## குற்றச்சாட்டை நிரூபிக்க முடியுமா? உடுகம்பொல சவால்

சர்வதேச நிறுவனங்களும்" ... தொடர்பாக அவர்களாக்கள் ... இவ்வாறு முன்னாள் பிரதி ...

புதன்கிழமை காலை 11 மணி வரை யாழ்ப்பாணத்தில் திறந்துவைக்கப்படவுள்ளது.

வடமாகாண பிரதி தபால் மா அதிபராக நியமிக்கப்பட்

இனிமேல் வடமாகாணத்தில் உள்ள சகல தபால் பகுதி நடவடிக்கைகளும் இவ்வலுவலகத்தின் கீழ் நடைபெறும்

—04 ஆம் பக்கம் பார்க்க

## உயர்நீதிமன்ற அழைப்பை ஏற்பதில்லை என பேரவை முடிவு

தமிழக சட்டப்பேரவைச் செயலாளர் இந்திய உயர்நீதிமன்ற அழைப்பை ஏற்றுக் கொள்ள முடியாது என நேற்று விசேடமாகக் கூடிய தமிழக சட்டப் பேரவையில் தீர்மானம் நிறைவேறியது.

மாலைமுரசு ஆசிரியருக்கு தமிழக சட்டப்பேரவை பிறப்பித்த பிடியாணை குறித்து அவர் உயர்நீதிமன்றில் தாக்கல் செய்த மனு தொடர்பாகவே உயர்நீதிமன்றம் தமிழக சட்டப்பேரவை செயலாளருக்கு அழைப்பு விடுத்திருந்தமை தெரிந்ததே.

சட்டப்பேரவைத் தீர்மானங்கள் எதையும் நீதிமன்ற உத்தரவு கட்டுப்படுத்தாது எனக் குறிப்பிட்ட சபைத் தலைவர் இரா. நெடுஞ்செழியன் குறித்த பத்திரிகை ஆசிரியர்கள் எழுத்து மூலம் மன்

—04 ஆம் பக்கம் பார்க்க

## உடுகம்பொல சவால்

சர்வதேச நிறுவனங்களும் உதவி வழங்கும் அமைப்புகளும், மனித உரிமைக் குழுக்களும், இராஜதந்திரிகளும், எதிர்க்கட்சித் தலைவரும் பல கட்சித் தலைவர்களும் எனக்கெதிராகப் புகார் செய்ததாக பிரதமர் தமது அறிக்கையில் குறிப்பிடுள்ளார். கல மனித உரிமை மீறல்கள் தொடர்பாக அவர்களால் என் மீது குற்றம் சுமத்தப்பட்டதுஎனக்கெதிரானஒருகுற்றச் சாட்டையாவது சமர்ப்பிக்க முடியுமாவென அதிகாரி வர்க்கத்துக்கு நான் சவால் விடுகிறேன்" அப்படியான பாரதூரமான புகார்களில் ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டதா?

இவ்வாறு முன்னாள் பிரதி பொலிஸ்மா அதிபர்பிரேமதாச உடுகம்பொல சண்டே டைம்ஸுக்கு எழுதிய கடிதத்தில்

— 4 ஆம் பக்கம் பார்க்க

உரிமையாளர்களான இரு வரும் திறத்துடன் மடக்கிப் பிடித்து அவர்களின் துப்பாக்கிகளையும் பறித்துக் கொண்டனர்.

இவர்களின் தாக்குதலுக்கு முகம் கொடுக்க முடியாத நிலையில் கொள்ளையர்கள்

— 4 ஆம் பக்கம் பார்க்க

நல்லூரில் தமிழிசைவிழா

02-05-1992 - 06-05-1992

## ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் ஸ்ரீலங்கா அதிககடன் கோரும்

ஐரோப்பாவில் உருவாகியுள்ள புதிய ஜனநாயக நாடுகள் சர்வதேச நிதி நிறுவனத்திடமிருந்தும் உலக வங்கியிடமிருந்தும் அதிகளவு நிதி உதவி கோருகின்றன இதனால் இந் நிறுவனங்களிடமிருந்து கடன் பெறுவதில் ஸ்ரீலங்காவிற்கு பாதிப்பு ஏற்படக்கூடிய நிலைமைகள் ஏற்பட்டுள்ளன.

இத்தாக்கத்திலிருந்து விடுபட ஸ்ரீலங்கா ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து கூடுதல் கடன் பெற முயற்சிக்குமென அறியப்படுகிறது. ஏற்கெனவே இருபது கோடி டொலர் கடன் இவ்வருடத்

— 4 ஆம் பக்கம் பார்க்க

# இன ஐக்கியம் உருவாக சமஉரிமை வேண்டும்

"இனவாதத்தை அரசியல் இலாபத்துக்காக யார் பயன் படுத்தினார்களோ அவர்களே சமத்துவ ஆதாயத்திற்காக இனஐக்கியம் என்ற வார்த்தையையும் பிரயோகித்து வருகின்றனர்" என்று நவசம சமாஜக் கட்சித் தலைவரான வாசுதேவநாணயக்கார எம். பி, பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற தேசிய ஒற்றுமை இனவிவகாரம் பற்றிய மாநாடு ஒன்றில் பேசுகையில் கூறினார்.

'இன ஐக்கியம் பற்றிய பூரண தெளிவு இல்லாதவரை அதை அடைவது அசாத்தியமே"

'இனஐக்கியம் உருவாக சகலருக்கும் சமஉரிமை இருத்தல் வேண்டும்" என்றும் அவர் சொன்னார்.

## இரவுப்படக்காட்சியால் இடர்

குருநகரில் இரவு நேரங்களில் மீண்டும் பொது வீதியில் தொலைக்காட்சிகளில் சினிமாப் படங்கள் காண்பிப்பது ஆரம்பமாகியுள்ளது.

பிரதான வீதிகளை தடை செய்து ஒரே தடவையில் இரவு முழுவதும் படம்காண்பிக்கப் படுவதனால் மக்கள் இரவு முழுவதும் வீதியை தடை செய்து குழுமிநிற்பது வழக்கமாக உள்ளது.

இதனால் இவ் வீதிகளினூடாக போக்குவரத்து செய்வது மிகவும் கஷ்டமாக உள்ளதாகபொதுமக்கள் தெரிவிக்கின்றனர். 15

## உணவு முத்திரை வழங்கல்

7 ஆவது தொடர் வறுமை நிவாரண உணவு முத்திரைகள் யாழ். செயலகத்தால் பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இதனால் கிராம சேவையாளர்கள் ஊடாக இம்மாத இறுதிக்குள் உணவு முத்திரைகள் மக்களுக்கு வழங்கப்படலாம் என செயலக வட்டாரம் தெரிவித்தது. 47

## வைத்தியர் பற்றாக்குறை

மன்னார் வைத்திய சாலையில் வைத்தியர் பற்றாக்குறை நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டது.

## அமைச்சுச் செயலாளர் விடுத்துள்ள அறிவுறுத்தல்

தமிழ் மொழி அமுலாக்கலைத் துரிதப்படுத்துமாறு பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் அமைச்சின் செயலாளர் சுற்றறிக்கை ஒன்றின் மூலம் வற்புறுத்தியுள்ளதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சகல அமைச்சின் செயலாளர்களுக்கும் மாகாண பிரதம செயலாளர்களுக்கும் திணைக்களத் தலைவர்களுக்கும் இச் சுற்றறிக்கை அனுப்பிவைக்கப்பட்டுள்ளது

தமிழ் மொழி அமுல் சம்பந்தமாக அனுப்பப்பட்டுள்ள வினாக்கொத்தை மிகவும் முன்னுரிமையளித்து நிரப்பி இம் மாதம் 21 ஆம் திகதிக்கு முன்னர் அரசகரும மொழிகள் ஆணைக்குழுவுக்கு அனுப்புமாறு சுற்றறிக்கையில் கோரப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## தமிழீழ மீட்புநிதி மீளளிப்பு விவரப் பட்டியல்

தமிழீழ மீட்புநிதிக்குக் கடனளித்தோரில் கடன் மீளளிப்பிற்கென தேர்ந்தெடுக்கப்பட்ட 536 பேரின் விவரம்

537, 1370, 1439, 1828, 3611 661. 1204. 3491, 129 135 782 785, 920, 3216. 72. 111, 141, 4173,

## போதைவஸ்து கடத்தல்; தமிழர் எண்மர் கைது

போதைப் பொருள் கடத்திய குற்றச் சாட்டின் பேரில் இத்தாலி ரோமில் எட்டுத் தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொலிசாரால் இவர்களிடமிருந்து ஐந்து கிலோ கிறாம் ஹெரோயினும் கைப்பற்றப்பட்டதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

இத்தாலிப் பொலிசார் தொடர்ந்து விசாரணை மேற்கொண்டுவருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

### இசைத்தட்டுப்பாடு என்பதாலும்...

திருவாரூரில் நடைபெற்ற கவியரங்கு ஒன்றில் கவிஞர் ஒருவர், தலைமைதாங்கிய புலவர் புலமைபபித்தனைப் பற்றிக் கூறுகையில் தலைவாழை இலையில் விருந்து தருவது தான் தமிழ்ப்பண்பாடு தலைவரோ (இசை) தட்டிலேதான் தருகின்றார் என்று பாடினார் புலமைப் பித்தன் பின்பு பாடும்கால்(இசைத்தட்டுப்பாடும் என்பதாலும் இலைத் தட்டுப்பாடும் இருந்ததாலும் இப்படித் தந்தேன், தவறா? என்றார் கைதட்டுக்கு குறைச்சல் இல்லை

## டயானாவின் உலக சாதனை

பிரிட்டனின் இளவரசர் சார்ள்சின் மனைவி டயானா ஒரு சாதாரண பெண். இவர் சார்ள்சை 1981 ஆம் ஆண்டு காதலிக்கத் தொடங்கியதிலிருந்தே இவருடைய புகைப் படங்கள் உலகம் முழுவதும் பத்திரிகைகளில் மிக அதிகமாக வெளிவரத் தொடங்கின உலகிலேயே மிக அதிகமாகப் புகைப்படங்கள் எடுக்கப்பட்ட பெண் இவர்தான் என்பதை உலகசாதனை ஏடு "கின்னஸ்" அண்மையில் வெளியிட்டுள்ளது.

அதுமட்டுமல்லாமல் இவர் இதுவரையில் இரண்டு மில்லியன் டொலர் மதிப்புள்ள ஆடைகளை வாங்கி இருக்கிறாராம் ஆண்டு ஒன்றிற்கு இவர் செலவு மட்டும் நான்கு கோடி ரூபா வாகும் இவரிடம் தொப்பிகள் மட்டும் 741 இருக்கின்றன சப்பாத்துகளைகள் 850 இருக்கின்றன. இவர் ஒரு நாள் போட்ட ஆடையை மீண்டும் போடுவதில்லை என்றும் அமெரிக்க வார இதழ் மிறர் குறிப்பிட்டுள்ளது. (16)

## பிரேமதாஸ மேஜர் ஒற்றுமை

ஜனாதிபதி பிரேமதாஸவுக்கும் பிரிட்டிஷ் பிரதமர் ஜோன் மேஜருக்கு மிடையில் பல ஒற்றுமைகள் இருப்பதாக இலங்கை விஜயம் செய்த பிரிட்டிஷ் பாராளுமன்ற உறுப்பினர் தேவ ஆதித்திய கூறியுள்ளார்.

## பீரங்கித்தாக்குதல்

நேற்று முன்தினம் மாலை 6.30 மணியளவில் காரை நகரிலிருந்து கடற்படையினர் சுழிபுரம், மூளாய் பகுதியை நோக்கி பலத்த கடற் பீரங்கித்தாக்குதலை மேற்கொண்டனர் இதனால் ஏற்பட்ட சேத விவரங்கள் பற்றித் தெரியவில்லை. (22)

★ வெடிகுண்டு அச்சம்;

# கட்டுநாயகா விமான நிலையத்தில் நேற்று கடும் பாதுகாப்பு!

கட்டுநாயகா சர்வதேச விமான நிலையம் எந்நேரமும் குண்டுவைத்துத் தகர்க்கப்படலாம் என்ற பலமான சந்தேகத்தையடுத்து நேற்று கடும் பாதுகாப்பு ஏற்பாடுகள் அங்கு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது மேலதிக பாதுகாப்பு அதிகாரிகள் கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

இவ் விமான நிலையத்துக்குச் செல்லும் சகல வாகனங்களும் வீதிகளில் நிறுத்தி சோதனையிடப்படவேண்டும் என்ற உத்தரவு உடனடியாக அமுலுக்கு வந்ததாக நேற்றுப் பிற்பகல் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

சோதனைச் சாவடிகளில் உள்ள பொலிஸாருக்கு விசேடம் படையினர் உதவ ஏற்பாடாகியிருந்தது.

வாகனங்களுக்குள் உள்ள பேயோரும் சோதனை இடப்பட வேண்டுமெனப் பணிக்கப்பட்டது.

சுதந்திர வர்த்தக வலயத்திலும் அதனைச் சுற்றியும் கூட பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

## இரண்டு மாதச் சிறை

தைவான் நாட்டில் தொழிலாளர்களை வேலைநிறுத்தம் செய்யத்தூண்டிய குற்றத்திற்காகத் தொழிற்சங்கத் தலைவர் செங் மாவ்சிங் என்பவருக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கில் தைவான்நீதி மன்று மாவ்சிங் கிற்குச் சமீபத்தில் இரண்டு மாதச் சிறைத் தண்டனை விதித்துள்ளது.

தைவானில் தொழிற்சங்கச் செயற்பாடுகளுக்காகத் தொழிற் சங்கவாதி ஒருவருக்குச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டமை தைவான் சரித்திரத்தில் இதுவே முதற் தடவை என்பது குறிப்பிடத்தக்கது. (16)

## பத்திரிகையாளர் விடுதலை

1989 செப்டெம்பர் 17 ஆம் திகதியின் சண்டே ரைம்ஸ் பத்திரிகையில் பிரிகேடியர் லக்கி அல்கமவை அவமானப்படுத்தும் வகையில் கேலிச் சித்திரம் வரைந்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட இப் பத்திரிகையின் செய்தி ஆசிரியர் லலித் அலகக்கோன் உயர் நீதிமன்ற நீதிபதி ஷிராணி திலகவர்த்தனவால் விடுதலை செய்யப்பட்டார்.

## தமிழகத்திலிருந்து திரும்பும் அகதிகள் கைதாகும் படலம் தொடர்கிறது

இந்தியாவிலிருந்துஇலங்கை திரும்பிய அகதிகளில் மேலும் இருவர் வவுனியாப் பகுதியில் வைத்துப் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்படிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது

சிவராசா குகனேஸ்வரன் என்பவர் கடந்த 15-4-92 திலான கதிரேசன் நடேசன் என்பவர் 27-3-92 இல் வவுனியா தபால் கந்தோரினுள் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் இப்போது மகசின் சிறையில் வைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

தமிழகத்திலிருந்து திரும்

### வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம் நடாத்தும் சுருக்கெழுத்துத் தட்டச்சு (தமிழ், ஆங்கிலம்) பயிற்சி நெறி

இடம்,- கழகப் பயிற்சி நிலையம், வதிரி, கரவெட்டி.

காலம்:- 16.5.92 முதல் 13.11.92 வரை

பிரிவு:- 1 சுருக்கெழுத்துத் தட்டச்சுப் பயிற்சி (தமிழ், ஆங்கிலம்)

(பாடசாலையை விட்டு விலகியோருக்கு மட்டும்)

பிரிவு:- 2 தட்டச்சுப் பயிற்சி. (தமிழ்/ஆங்கிலம்)

களைத் தமிழீழ விடுதலைப் புலிகள் நிதிப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

இன்று அவர்களில் 117 பேரின் விபரங்கள் இங்கு தரப்படுகின்றன. மிகுதி தொடர்ந்து வெளிவரும்.

யா:நல்லூர்

1281, 3164, 4548, 4620, 990, 3268, 4605, 4851, 871, 1014, 1387, 2459, 2844, 3984, 581, 1948, 4874, 41, 139, 595, 4725, 391, 774, 1593, 2006, 8359, 4795, 5032, 5814, 3348, 4145, 2528, 4200,

யா:யாழ்ப்பாணம்

5819, 87, 1245, 1448, 5536, 387, 3957, 906,

3210, 72, 111, 141, 4173, 148, 945, 2949, 83, 879, 4014,

யா: கோப்பாய்

யா/கோ/ 587, 3449, 784, 2649, 601, 1994, 538, 3191, 375, 486, 1107, 3981, 106, 63., 2970, 3955, 954, 5342, 209, 254, 310, 903, 2736, 3329, 1671, 4247, 5492, 2897, 3238, 508, 4362.

யா. உ.

யா/உ/ 2104, 639, 650, 2089, 509, 2445, 2930, 74, 2153, 172, 92, 2435, 2830, 514, 625, 170, 1312, 43, 2361, 2459, 26.

(தொடரும்)

என்பவர் கடந்த 15-4-92 அன்று வேப்பங்குளத்தில் அகதிமுகாமில் வைத்து படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேபோல் மற்றொரு அகதி தமிழகத்திலிருந்து திரும்பும் அகதிகள் சிலர் படையினரால் இவ்விதம் கைது செய்யப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

# இந்திய ராஜதந்திரி
## விசாரணையின் பின் விடுதலை

அமெரிக்க உளவு நிறுவனமான சி ஐ ஏ க்கு தகவல் அளித்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு சிறையில் வைக்கப்பட்ட இந்திய ராஜதந்திரி விசாரணையின் பின் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

இந்த விசாரணை பிரதமர் பி.வி நரசிம்மராவின் பணிப்பின் பேரில் நடைபெற்றதாகவும் இந்த விசாரணையின் முடிவில் குறிப்பிட்ட ராஜதந்திரி குற்றவாளி அல்லர் என தீர்மானிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.


(பாடசாலையை விட்டு விலகியோருக்கு மட்டும்)

பிரிவு:- 2 தட்டச்சுப் பயிற்சி. (தமிழ்/ஆங்கிலம்)
(தொழில் புரிவோருக்கு மட்டும். வார இறுதி நாட்களில் நடாத்தப்படும்)

மேலதிக விபரங்களையும் விண்ணப்பப் படிவத்தினையும் 08-05-92 வரை கழகப் பயிற்சி நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**விண்ணப்ப முடிவு திகதி: 8.5.92**

பயிற்சி நிலையம் செயலாளர்
வதிரி, கரவெட்டி. வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம்
28 4-92

விளம்பர அன்பளிப்பு:

செல்வி மாலினி இராசேந்திரம் சுருக்கெழுத்துப் போதனாசிரியை மக்கள் நலன்காக்கும் பிரிவு,
கோப்பாய். 05007

யாழ்ப்பாணம்



விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக்கழகம் நடாத்தும்

# நல்லூரில் தமிழிசை விழா - 1992

## ★ இன்றைய நிகழ்ச்சிகள் ★

மாலை 5.00 மணி தொடக்கம் 6.00 மணி வரை மங்கள இசை

| நாதஸ்வரம் | தவில் |
|---|---|
| திரு. ஏ. பாலசுந்தரம் | திரு. ஏ. சின்னக்கணேசன் |
| திரு வி. நகுலேஸ்வரன் | திரு வி. ராமச்சந்திரன் |
| திரு. கே. நம்பிராஜன் | திரு கே. சச்சிதானந்தன் |
| திரு. கே. உதயநாதன் | திரு. கே. நாகேந்திரம் |

6.00 மணி தொடக்கம் 7.00 மணி வரை பாட்டு

| | |
|---|---|
| செல்வி ராதிகா சுப்பிரமணியம் | பாட்டு |
| செல்வி சாந்தநாயகி சுப்பிரமணியம் | வயலின் |
| திரு. எஸ். துரைராசா | மிருதங்கம் |

7.00 மணி தொடக்கம் 8.00 மணி வரை பாட்டு

| | |
|---|---|
| திருமதி மிதிலா விவேகானந்தன் | பாட்டு |
| திரு. எஸ். சர்வேஸ்வரசர்மா | வயலின் |
| திரு. கே கண்ணதாசன் | மிருதங்கம் |

8.00 மணி தொடக்கம் 8.30 மணி வரை

சிறப்பு விருந்தினர் உரை

செல்வி ஜெயா அவர்கள் (பொறுப்பாளர், விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணி)

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்

செல்வி ஜனனி அவர்கள் (பொறுப்பாளர், செஞ்சோலை)

8.30 மணி தொடக்கம் 9.30 மணி வரை பாட்டு

| | |
|---|---|
| திரு. எஸ். பத்மலிங்கம் | பாட்டு |
| திரு பி கண்ணன் | வயலின் |
| திரு. எம் சிதம்பரநாதன் | மிருதங்கம் |
| திரு. எஸ். மகேந்திரன் | கெஞ்சிரா |

9.30 மணி தொடக்கம் 10.30 மணிவரை நாதஸ்வரம்

| நாதஸ்வரம் | தவில் |
|---|---|
| திரு. கே எம் பஞ்சாபிகேசன் | திரு. கைதடி பழனிமலை |
| திரு. வி. கே. பஞ்சமூர்த்தி | திரு ஆர் புண்ணியமூர்த்தி |
| திரு. எம். பி. நாகேந்திரம் | திரு. எஸ் முருகையா |
| | திரு எஸ். சுந்தரலிங்கம் |

## 'கலை என்றால் குரு, சிஷ்யத்துவ முறை உண்டு'

"சங்கீதக் கலை, நாடகக் கலை, நடனக்கலை, ஓவியக் கலை, சிற்பக்கலை என எந்தக் கலையை எடுத்துக் கொண்டாலும் அங்கே குரு-சிஷ்யத்துவ முறை மூலம் பயிற்றுவிப்பதையும் பயில்வதையும் நாம் காணலாம்.

கலைகள் ஒரு பரம்பரையிலிருந்து இன்னுமொரு பரம்பரைக்கு இந்த குரு-சிஷ்யத்துவ முறையில் பாரம் கொடுக்கப்பட்டு வருகிறது. இந்த முறையில் தொய்வு ஏற்படாது கலைப் பயிற்சிகள் தொடர்ந்து இடம்பெற வேண்டியது போராட்ட காலங்களில் மிக அவசியமாகும். அப்படியானால்தான் எமது தற்போதைய சந்ததி எமது கலைகளைப் பாதுகாத்து அடுத்த சந்ததிக்கு பாரம் கொடுக்கலாம்.

தமிழிசையைப் பொறுத்தவரையில் இராவணன் கூட தமிழிசையிலே வேதாளை வணை சாந்தப்படுத்தியுள்ளான். எனவே இசை மனித உணர்வுகளை உற்சாகப் படுத்தவும், சமநிலைப் படுத்தவும் கூடியது.

1962 ஆம் ஆண்டு இந்தோ-சீன யுத்தம் நடந்தபோது கலைஞர்கள் போர் முனைக்குச் சென்று போர் வீரர்களை ஊக்குவித்தனர். அவ்வாறான கடமை எமது கலைஞர்களுக்கு உண்டு. இங்கே போராளிகள் கலைஞர்களாக பங்கு கொள்ளக் கூடியதாக இந்த விழா அமைந்துள்ளது."

இவ்வாறு திரு சி வி கே. சிவஞானம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த தமிழிசை விழாவில் பேசும்போ குறிப்பிட்டார்.

## வடக்கு-கிழக்கு இணைப்பைக் கைவிடுக — ஹெல உறுமய

வடக்கு-கிழக்கு இணைப்பைக் கைவிடுமாறு தமிழர்களை சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தீவிரவாதப் பிரிவு அமைப்பான 'ஹெல உறுமய' கோரியுள்ளது.

பாராளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு சமர்ப்பித்த அறிக்கையில் தமிழர் அமைப்புகள் எல்லாம் வடக்கு-கிழக்கு இணைப்பை வலியுறுத்தியதை எதிர்க்கு முகமாக ஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் திலக் கருணாரத்னாவும் எஸ். எல். குணசேகரவும் அறிக்கை யொன்றை வெளியிட்டுள்ளனர்.

இணைப்புக் கோரிக்கை கிழக்கு மாகாணத்தில் பெரும்பான்மையாக வாழும் சிங்கள முஸ்லிம் மக்களது உரிமைகளை மறுப்பதாக உள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

### மின் வெட்டு இல்லை

வறட்சி நீங்கியுள்ளதால் தற்போது அமுல் செய்யப் பட்டு வரும் மின்வெட்டு முற்று முழுதாக நீக்கப்படலாம். அல்லது மின்வெட்டு நேரம் குறைக்கப்படலாம் என இலங்கை மின்சாரசபை அதிகாரிகள் கொழும்பில் தெரிவித்தனர்.

நீரேந்து பகுதிகளில் நீர் மட்டம் உயர்ந்துள்ளதாலும் மேலும் மழை பெய்யக் கூடிய சாத்தியமிருப்பதாலும் நிலைமையை மின்சார சபையின் உயர்மட்டக் குழுவொன்று நேற்றுக் கூடி ஆராய்ந்தது.

## குருநகர் வி.க. போட்டிகள்

குருநகர் விளையாட்டுக் கழகம் நடாத்தும் 7 வீரர்கள் மாத்திரம் பங்குபற்றும் தகர்த்தல் முறையிலான உதைபந்தாட்டப் போட்டிகள் நேற்று முன்தினம் சென். றோக் விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகியுள்ளன.

முதலில் நடந்த போட்டியில் அரியாலை அணி அதனை எதிர்த்து ஆடிய மாதகல் சென் தோமஸ் அணியை பெனால்டி உதை மூலம் அடைந்த 4:3 என்ற கோல்கள் கணக்கில் வென்றது.

தொடர்ந்து இடம்பெற்ற இன்னொரு போட்டியில் இறீன் பீல்ட் அணி அதனை எதிர்த்து மோதிய நாவாந்துறை சென் நீக்கிலஸ் அணியை 3:1 என்ற கோல்கள் கணக்கில் வென்றது.

விமலதாஸ், றொபேர்ட், வின்சென் அன்ரனி ஆகியோர் நடுவர்களாகக் கடமையாற்றினார்கள். (16)

## இரத்மலானை இந்து மீண்டும்

1983 ஆம் ஆண்டு இனக் கலவரத்தைத் தொடர்ந்து மூடப்பட்டு பல காலம் இராணுவத்தினரால் முகாமாகப் பாவிக்கப்பட்ட இரத்மலானை இந்துக் கல்லூரி நாளை 6 ஆம் திகதி மீண்டும் இயங்கும்.

## இ. தொ. கா. ஜனாதிபதிக்கு புகார்

பதுளை மாவட்டத்திலிருந்து காணாமற்போன 14 தமிழர்களின் கதி என்ன என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கேள்வி எழுப்பியுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக இ. தொ. கா. ஜனாதிபதி ஆர் பிரேமதாஸவின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## மட்டுநகரில் சமரச மாநாடு

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழ்கின்ற தமிழ்- முஸ்லிம் மக்கள் மத்தியில் புரிந்துணர்வையும், ஐக்கியத்தையும் ஏற்படுத்தி விரும்பத்தகாத சம்பவங்கள் மேலும் நிகழாதவாறு தடுக்கும் வகையில் நேற்று மட்டக்களப்பு செயலகத்தில் சமாதான மாநாடு ஒன்று நடைபெற்றது.

இரு சமூகங்களையும் சேர்ந்த பிரமுகர்கள், எம் பிக்கள் இம் மாநாட்டில் கலந்து கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## இந்து கலைக்களஞ்சியம்

இந்து கலைக்களஞ்சியம் 2 ஆம் பாகம் விரைவில் வெளியிடப்படவுள்ளது. இதற்கான வேலைகள் யாவும் பூர்த்தியடைந்து விட்டதாக இந்து கலாசார அமைச்சைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தற்போது இந்த கலைக் களஞ்சியம் 3 ஆம் பகுதிக்கான தயாரிப்பு வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்றும் அவர் கூறினார். 22

## புதுமை ஹோட்டல்

அமெரிக்காவில் உள்ள ஒரு சிறிய நகரத்தின்பெயர் சட்டநூகா. இந்த நகரம் இப்போது இரண்டு காரணங்களுக்காகப் புகழ் பெற்றிருக்கிறது. ஒன்று உலகில் எங்கேயும் இல்லாத ஒரு புதுமையான ஹோட்டல் இங்கிருக்கிறது. ரயில்வே நிலையமாக இயங்கிவந்த இடத்தை ஹோட்டலாக மாற்றியுள்ளார்கள். சட்டநூகா சூசூ என்று பெயரிடப்பட்டுள்ள இந்த ஹோட்டல் முழுதும் இரயில் பெட்டிகளாலேயே உருவாக்கப்பட்டுள்ளது. இதற்கு 5 நட்சத்திர அந்தஸ்து வழங்கப்பட்டிருக்கிறது.

இரண்டாவது கொகோ கோலா நிறுவனத்தினது முதன் முதலாக பட்டிலிங் பிளாண்ட் அமைந்த இடம் என்பது மட்டுமல்லாமல், டபுள் கோலா என்னும் குளிர் பானமும் இங்குதான் முதலில் ஆரம்பிக்கப்பட்டது. (16)

## திருத்தம்

'இசையுடன் பிறக்கிறான் மனிதன்' என்ற தலைப்பில் நேற்றைய பதிப்பில் 3 ஆம் பக்கத்தில் வெளியான செய்தியில் கடற்புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு இரனி மாஸ்டர் சிறப்புரையாற்றுகையில் என்றிருக்கவேண்டும் தவறுக்கு வருந்துகிறோம்.

## 'வட-கிழக்கு யுத்தத்தை உடன் நிறுத்த வேண்டும்'

"தமிழ் மக்களுக்கு எதிராக அரசு வடக்கு, கிழக்கில் நடத்தும் யுத்தத்தை உடன் நிறுத்தவேண்டும்."

இவ்வாறு லைத் தொழில் போக்குவரத்துப் பொது ஊழியர் சங்கத்துடன் இணைந்து தெமட்டகொட மைதானத்தில் ஐக்கிய தொழிலாளர் சங்கம் நடத்திய மேதினக் கூட்டத்தில் உரையாற்றிய பொதுச் செயலாளர் மலிமாராச்சி அரசுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

### மகோற்சவம்

அளவெட்டி கும்பளாவளைப் பிள்ளையார் ஆலய வருடாந்த மகோற்சவம் நாளை புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினொரு நாள்கள் இடம்பெறும்.

15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும், 16 ஆம் திகதி சனிக்கிழமை தீர்த்த உற்சவமும் நடைபெறுமென ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (50)

## பொலிஸார் - ஊர்காவலரை இணைத்து புதிய திட்டமாம்

பொலிஸாரும், ஊர்காவற் படையினரும் இணைந்து பொதுமக்களுக்குப் பயிற்சியளிக்கும் புதிய பாதுகாப்புத் திட்டம் ஒன்றிலைப் பாதுகாப்பு அதிகாரிகள் தயாரித்துவருவதாக நேற்றைய 'ஐலண்ட்' நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

எதிர்பாராத தாக்குதல்களிலிருந்து வடக்கிலும், கிழக்கிலும் உள்ள பொலிஸ் பாதுகாப்பற்ற முஸ்லிம், சிங்களக் கிராமங்களைப் பாதுகாப்பதற்காக இப்புதிய பாதுகாப்புத் திட்டம் தயாரிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கிளிநொச்சிக்கு அம்புலன்ஸ் கொண்டுவர அனுமதி மறுப்பு

கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலைக்கென சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள புதிய அம்புலன்ஸ் வாகனத்தை கட்டுப்பாட்டுத் தலைமையகம் கொழும்பிலிருந்து வடக்கே கொண்டுவர தற்போது அனுமதி மறுத்துள்ளது.

இதனால் சில தினங்களுக்கு முன்னர் இவ்வாகனத்தை எடுத்துவர ஆஸ்பத்திரி ஊழியர்கள் கொழும்பு சென்று திரும்பி வந்தனர்.

இதேநேரம் தற்போது இந்த ஆஸ்பத்திரியில் பழுதடைந்துள்ள பழைய அம்புலன்ஸை கொழும்புக்கு அனுப்பி திருத்தவும் ஆனோ இக்கப்படுவதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. (17)

# நம்பிக்கையில்லா பிரேரணை எதிர்க்கட்சிகள் மிரட்டல்

உடுகம்பொல விவகாரம் குறித்து இருநாள் விவாதத்தை நடத்த பாராளுமன்றத்தில் நேரம் ஒதுக்குமாறு எதிர்க்கட்சிகள் அரசைக் கோரியுள்ளன.

இக்கோரிக்கை ஏற்கப்படாவிட்டால் பாராளுமன்றத்தில் இது தொடர்பாக நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டுவருவோம் எனவும் எதிர்க்கட்சியினர் எச்சரித்துள்ளனர்.

# சீனி, பால்மா அதிகமாக கோமாரிக் கப்பலில் வருகிறது

கொழும்பில் இருந்து உணவுப் பொருள்களை ஏற்றிக்கொண்டு கோமாரிக் கப்பல் எதிர்வரும் 8 ஆம் திகதி பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையும் என யாழ். செயலக வட்டாரம் தெரிவித்தது.

இம்முறை இக்கப்பலில் 1150 மெ. தொன் சீனியும் கூடுதலாகப் பால்மா, பருப்பு வகைகளும் எடுத்துவரப்படுவதோடு அரிசி, மா என்பன குறைந்தளவே கொண்டுவரப்படுவதாகவும் அவ்வட்டாரம் மேலும் தெரிவித்தது. (47)

# தாண்டிக்குளம் ரயில் நிலைய வேலைகள் ஆரம்பம்

வவுனியாவில் இருந்து வடக்கு நோக்கி தாண்டிக்குளத்தில் புதிய புகையிரத நிலையம் அமைக்கப்படவுள்ளது.

அனுராதபுரத்திலிருந்து தினமும் இங்கு சிலிப்பர் கட்டைகள் கொண்டுவரப்பட்டு ரயில் பாதை விஸ்தரிக்கும் வேலைகள் நடைபெறுகின்றன.

இந்த வேலை முடிந்ததும் வடபகுதி பயணிகள் வவுனியா நகருக்கு செல்லாமல் ரயிலில் பயணம் செய்யலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (25)

# அமெரிக்க இனவன்முறைகள் 'ரைம்' சஞ்சிகையின் கணிப்பு

அண்மையில் அமெரிக்காவில் நடைபெற்ற இனக்கலவரத்தை தொடர்ந்து கறுப்பு வெள்ளையின மக்களிடையே அவர்களின் மனநிலையை அறியுமுகமாக கருத்துக்கணிப்புகள் எடுக்கப்பட்டன.

ரைம்ஸ் எனும் அமெரிக்க சஞ்சிகை எடுத்த கருத்துக் கணிப்புகளின் முடிவுகள்

அண்மைய இனவன் முறைகளை நியாயப்படுத்த முடியுமா எனக்கேட்டபோது வெள்ளையர்களில் 77 வீதமானோர் நியாயப்படுத்த முடியாது என்றனர் கறுப்பர்களில் 89 வீதத்தினர் இனவன்முறை நியாயமானதே என்றனர்.

அமெரிக்க நீதி மன்றங்களில் இரு இனத்தவரும் சமமாக கருதப்படுகின்றனரா?

வெள்ளையர்களில் 30 வீதத்திற்கும் அதிகமானோர் சமமாக நடத்தப்படுவதாக தெரிவித்தனர் கறுப்பர்களில் 5 வீதத்தினரே இதை ஏற்றுக்கொண்டனர்,

கறுப்பினத்தவர்களில் 84 வீதத்தினர் நீதிமன்றத்தில் கறுப்பினத்தவரைவிட வெள்ளையருக்கு கூடிய சலுகைகள் தரப்படுகின்றன எனக்கருதுகின்றனர்

இதை வெள்ளையர்களில் 42 வீதமானோரும் ஒப்புக்கொண்டனர்

வன்முறை தொடர்பாக கறுப்பினத்தவர் குறித்து என்ன கருதுகிறீர்கள் என வெள்ளையரிடம் கேட்டபோது, 46 வீத வெள்ளையர்கள், கறுப்பினத்தவரே இனப்பாகுபாட்டை இவறுகின்றனர் என்றனர் 15 வீத வெள்ளையர் கறுப்பர்கள் வன்முறைப்பிரியர்கள் என்கின்றனர்

இதே கேள்வியை கறுப்பினத்தவரிடம் கேட்ட போது கறுப்பினத்தவர்களில் இதைவிட இரு மடங்கு சதவீதத்தினர் வெள்ளையர்களையே குற்றஞ்சாட்டுகின்றனர்

# பூநகரிப்பகுதி ஊடாக விரைவில் புதிய படகுச் சேவை

குரைமுனங்கு கடற்பகுதியில் இருந்து கிளாலி துறைமுகத்திற்கு படகுச்சேவை ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

படகுகள் கரைக்கு வந்து செல்லும் முகமாக பூநகரியில் உள்ள நல்லூர், ஆலங்கேணி, தம்பிராய், ஆலம்பொறந்து கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்கள் கரைப் பகுதியினுள் 300 அடி நீளமானதும் 5 அடி ஆழமானதுமான கால்வாய் ஒன்றினை வெட்டியுள்ளனர்.

ஏழுமைல் நீளமான இக்கடல் வழியினை 2 மணி நேரத்தில் கடந்துமுடிக்கலாமெனவும் தெரியவருகின்றது.

ஆலங்கேணியூடாகச் செல்லும் சங்குப்பிட்டி-பரந்தன் பிரதான வீதியில் இருந்து குறுக்காகச் செல்லும் இவ்வழி மூலம் 3 மைல் தூரத்தினைக் கடந்ததும் குரைமுனங்கு கரை வந்தடையும்.

இதனால் யாழ் பயணிகளின் தூரம் பல மைல்களில் குறையும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (31)

# ஏரிக்கரைப்பத்திரிகைகள் சுதந்திரமாக இயங்க வேண்டும்

ஏரிக்கரைப் பத்திரிகைகள் அரச கட்டுப்பாட்டில் இருந்து விடுவிக்கப்பட்டு முழு சுதந்திரத்துடன் இயங்க வேண்டும் என ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அறிவித்துள்ளது

சென்றகிழமை ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி வெளியிட்ட கொள்கை அறிக்கையில் ஏரிக்கரைப் பத்திரிகைகள் முழுச் சுதந்திரத்துடன் செயற்பட வேண்டும் எனத்தீர்மானித்துள்ளதாக அவ்வறிக்கை தெரிவித்தது

நாட்டுக்கும் புதிய அரசியல் யாப்பு ஒன்று தயாரிக்க வேண்டுமென்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது

## ஆப்கானில் ஷெல் தாக்கு

ஆப்கான் இடைக்கால அரசை எதிர்த்துவரும் குல்புதீன் ஹெக்மத்தியாரின் இஸ்லாமிக் குழு நேற்று காபூல் நோக்கி நடத்திய ஷெல் தாக்குதலில் சிறுவன் ஒருவன் பலியானான் பதிலுக்கு அரசுக்கு ஆதரவு தரும் மசூத் இஸ்லாமிக்குழுவும் தாக்குதல் நடத்தியது

## கடற்போட்டி

வடமராட்சியில் கடற்புலிகளால் நடத்தப்படும் கடற்போட்டிகள் நேற்று கடலில் மடம் பாதுகாப்பின் மத்தியில் நடைபெற்றன போட்டிகள் இன்றும் நடைபெறுகின்றன,

## மின்வெட்டு தளர்வு

தென்னிலங்கையில் இருந்த ஒருமணி நேர இரவு மின்வெட்டு முற்றாக நீக்கப்பட்டுள்ளது. இதேசமயம் பகல் நேர நாலரை மணிநேர மின்வெட்டு நான்கு மணிநேர மின்வெட்டாக குறைக்கப்பட்டுள்ளது.

சித்தியடை...

மிகுதியாக உள்ளவர்கள் பதவி வெற்றிடங்களாக உள்ள திணைக்களங்களில் நியமிக்கப்படுவார்கள் என செயலக வட்டாரங்கள் தெரிவித்தன

இதேவேளை யாழ் மாவட்டத்தில் மத்திய அரசின் கீழ் இயங்கும் திணைக்களங்களின் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு யாழ் அரச அதிபர் க. மாணிக்கவாசகர் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் இது குறித்து கொழும்பில் உள்ள சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் அவர் தொடர்பு கொண்டுள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன, 26

தபால்...

எனவும், கொழும்புக்கு செல்லத் தேவையில்லை எனவும் தபால் பகுதி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வடமாகாண பிரதி தபால் மா அதிபர் அலுவலகத்தை முன்னர் வவுனியாவில் இயக்க வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குற்றச்சாட்டை...

குறிப்பிட்டுள்ளார். பிரதமர் விஜேதுங்கவின் ஏப்ரல் எட்டாம் திகதிய அறிக்கைக்கும் பதிலளிக்கும் முகமாகவே உடுகம்பொல இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளார்

விசாரணை அதிகாரங்கள் குற்றப் புலனாய்வுப் பகுதிக்கு மட்டும்தான் உரியது என்று கூறமுடியாதென்றும், எந்தவொரு பொலிஸ் உத்தியோகத்தருக்கும் குற்றச் செயல்களை தடுக்கவும் கண்டுபிடிக்கவும் சட்டப்படி அதிகாரம் உண்டு எனவும் உடுகம்பொல கூறியுள்ளார்.

தமது சகோதரர் மேஜர் உடுகம்பொல எந்தவிதப் படுகொலைகளிலும் ஈடுபடவில்லையெனக் குறிப்பிட்டுள்ளார், உடுகம்பொல தாம் கடமையாற்றாத எம்பிலிப்பிட்டிய, களுத்துறை, பாணந்துறை, கம்பஹா, நீர்கொழும்பு, குருநாகல ஆகிய பகுதிகளிலும் கறுப்புப்பூனை கொலைகள் நடைபெற்றிருப்பதை இவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கறுப்புப்பூனை நடவடிக்கைகளோடு ஒத்துப் போகாத பல இராணுவ அதிகாரிகள் மாற்றம்செய்யப்பட்டது பற்றியும் குறிப்பிட்டுள்ள உடுகம்பொல பல சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளும், பொதுமக்களும் விசாரணைக் கமிஷன் ஒன்றின் முன் சாட்சியளிக்க தயாராக உள்ளதாகவும் இந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

கனடா...

இருவரும் நகைகளை திருப்பித்தருவதாகவும் தம்மை விடுவிக்குமாறும் மன்றாடினர்.

எனினும் இவர்கள் பின் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

உயர்நீதிமன்ற...

மன்னிப்புக் கேட்டால் அவர்கள் மன்னிக்கப்படுவர் எனக்குறிப்பிட்டார்.

தீர்மானத்தை எதிர்த்து சில எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.

விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய பாராளுமன்ற உறுப்பினர் பண்டுட்டி இராமச்சந்திரன் "சட்டப்பேரவை ஒருவருக்கு மரண தண்டனை விதித்தால் உயர் நீதிமன்று பார்த்துக் கொண்டிருக்க வேண்டுமா?" எனக் கேள்வி எழுப்பினார்.

ஆசிய...

திற்கு அங்கீகாரமளிக்கப்பட்டுள்ளது.

நேற்று ஹொங்கொங்கில் ஆரம்பமான ஆசிய அபிவிருத்தி வங்கியின் மூன்று நாள் கூட்டத்தில் பிரதமர் டீ.பி. விஜேதுங்க இவ்வாறு மேலதிக கடன் கோரிக்கை சமர்ப்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

விரைவில்!

ஷப்றா

கிண்ணத்துக்காக

ஜொலி ஸ்ரார்ஸ் வி. க. நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கிரிக்கெட் போட்டித் தொடர்

விவரங்களுக்கு: ஷப்றா யாழ்ப்பாணம்.

05009

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் டச்சு வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம் லட்சுமி கட்டிடத்தில் உள்ள அச்சகத்தில் 05-05-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.